# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in

**Lr. No.TNTEU/R/**One time use of plastics**/2018-19/2457** **Date: 30.10.2018**

## சுற்றறிக்கை

பொருள்: சுற்றுச்சூழலை பாதுகாத்தல் - ஒரு தடவை மட்டுமே உபயோகப் படுத்தும் பிளாஸ்டிக் - பயன் பாட்டின் அளவை குறைத்தல் - பல்வேறு பிரச்சார உத்திகளை கையாளுதல் - பயிற்சி ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல் - மேலும் தொடர்ந்து புதிய உத்திகளை நடைமுறைபடுத்துதல் - தொடர்பாக.

*****

தற்பொழுது உலகை அச்சுறுத்தும் பல்வேறு அச்சுறுத்தல்களில், சுற்றுச் சூழல் சீர்கேடும் ஒன்று என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. இந்த சுற்றுச்சூழல் சீர்க்கேட்டிற்குரிய முக்கிய காரணங்கள் அந்தந்தப் பகுதிகளில் வாழும் மனித இனமும், அவர்கள் வாழும் வாழ்க்கை முறைகளுமே ஆகும். இந்த சீர்க்கேட்டை களைவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு மத்திய மாநில அரசுகள் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றியும், மக்கள் கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகளை அவ்வப்போது அறிவித்து வருகிறது.

இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் கல்வி பயிலும் பயிற்சி ஆசிரியர்கள், வருங்கால சந்ததியினருக்கு, குறிப்பாக மாணவச்செல்வங்களுக்கு உரிய வழிகாட்டி எடுத்துச் செல்ல உள்ளனர். எனவே, சுற்றுச்சூழல் பாதுகாத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அனைத்துக் கல்வியியல் கல்லூரி முதல்வர்களுக்கும் அவ்வப்போது இப்பல்கலைக்கழகம் பல்வேறு கடிதங்கள் மூலம் அறிவுறுத்திவருகிறது.

குறிப்பாக, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளின் (one time use plastic bags) பயன்பாட்டை கல்லூரி வளாகம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் முற்றிலும் குறைப்பதற்குப் பல்வேறு கல்வியியல் கல்லூரிகள் எடுத்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகள் புகைப்படத்துடன் இப்பல்கலைக்கழகத்தில் பெறப்பட்டுள்ளன. அக்கல்வியியல் கல்லூரிகளை, இப்பல்கலைக்கழகம் பாராட்டுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு செயல்பாடுகள் தொடர்பாக, இதுவரை பல்வேறு கல்வியியல் கல்லூரிகள் எடுத்துள்ள முயற்சிகளை, அவர்கள் அளித்த அறிக்கை மற்றும் புகைப்படங்களின் அடிப்படையில், மற்ற கல்லூரிகளும் செயல்படுத்தும் வகையில் கீழே தொகுத்து வழங்கப்படுகிறது.

- பயிற்சி ஆசிரியர்கள் துணி மற்றும் காகிதப் பைகளைத் தயாரித்தளித்து, கல்லூரி வளாகத்திற்குள் பிளாஸ்டிக் பை பயன்பாட்டை முற்றிலும் ஒழித்ததோடு, அருகில் உள்ள கடைத்தெரு மற்றும் சந்தைப்பகுதிகளுக்குச் சென்று, தாங்கள் தயாரித்த துணி/காகிதப் பைகளை இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கி, பிளாஸ்டிக் பையின் பயன்பாட்டை ஓரளவு குறைத்ததோடு பொதுமக்களுக்கு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளனர்.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் அல்லது அதில் நிபுணத்துவம் பெற்றவர்களைக் கல்லூரிகளுக்கு அழைத்து, கல்லூரியில் பயிற்சி ஆசிரியர்களுக்கு விரிவுரை(Lecture) அளித்து பயிற்சி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர்.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான சிறு நாடகங்களைத் தயாரித்து மாணவர்களைக் கொண்டு இயக்கி பயிற்சி மாணவர்கள் மற்றும் அருகில் உள்ள பொது மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கியுள்ளனர்.

- சில கல்லூரிகளில் "Use of one time plastic is strictly banned in this campus", "Plastic Free Zone", "Plastic Free Campus", "நெகிழி இல்லா கல்லூரி வளாகம்" போன்ற அறிவிப்புக்களை கல்லூரி வளாகத்தில் மற்றும் சுற்றுப்புரங்களில் வைத்து இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளனர்.

- சில கல்லூரிகளில், "ஆசிரியர் பயிற்சி மாணவர்களாகிய நாங்கள், கல்லூரி வளாகத்துக்குள்ளும், வீடு மற்றும் பொது இடங்களிலும் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்த மாட்டோம்" என உறுதி மொழி எடுத்துள்ளனர்.

- சில கல்லூரிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான தலைப்புகளில் கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கி மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தி உள்ளனர்.

- பொதுமக்கள் கூடும் பொது இடங்கள் மற்றும் தெரு ஓரங்களில் ஓரங்க நாடகம் நடத்தி பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர்.

இதுவரை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வில் கவனம் செலுத்தாத கல்லூரிகளும், இச்சுற்றறிக்கை கிடைத்தவுடன், தாங்களும் தங்கள் கல்லூரி மாணவ மாணவியர்களை இவ்விழிப்புணர்வில் பங்கேற்கச் செய்து, தாங்கள் நிகழ்த்திய சுற்றுப்புற சூழல் விழிப்புணர்வு சார்ந்த செயல்பாடுகள் பற்றிய அறிக்கையைப் புகைப்படங்களுடன் இப்பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளலாகிறது.

30/10/18

பதிவாளர் (பொ)

பெறுநர்கள்:
செயலாளர்கள் / முதல்வர்கள்,
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்வியியல் கல்லூரிகள்.